தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், விருதுநகர் மாவட்டம்
(இருப்பு), திருவில்லிபுத்தூர்.
<u>முன்னிலை.</u> **திரு.R.V. ராஜகுமார், B.L.,**
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்
2026 ம் ஆண்டு மே திங்கள் 29 ஆம் நாள் வெள்ளிக்கிழமை
**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.574/2022**
CNR No.TNVR02-007129-2022

தமிழ்நாடு அரசின் பிரதிநிதி,
துணை இயக்குநர்–I
தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்,
விருதுநகர் .... குற்றமுறையிடுபவர்

/ எதிர் /

திரு.நாகராஜ் (வயது –45)
த/பெ.சுப்பாராஜ்,
மேலாளர்,
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்
கழகம் (மதுரை) லிட்., விருதுநகர் கிளை
ச.எண்.6/377 சின்னமூப்பன்பட்டி,
மதுரை ரோடு,
விருதுநகர் வட்டம் மற்றும் மாவட்டம். ... குற்றம் சாட்டப்பட்டவர்

இவ்வழக்கு 06.08.2022 அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு புகார்தாரர் தரப்பில் அரசு கூடுதல் குற்றத்துறை வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.செந்தில்குமார் அவர்கள் ஆஜராகியும், 18.05.2026 அன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், இது நாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## <u>தீர்ப்புரை</u>

கடந்த 29.04.2021 அன்று பிற்பகல் 03.50 மணியளவில் வாதி, விருதுநகர் மாவட்டம், விருதுநகர் வட்டம், சின்னமூப்பன்பட்டி கிராமத்தில் உள்ள தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்(மதுரை) லிட்., விருதுநகர் கிளையை ஆய்வு செய்தபோது தொழிற்சாலையின் மேலாளரிடம் விடுப்பு கோரி தொழிலாளர்கள்

விண்ணப்பம் எதுவும் சமர்ப்பிக்காத நிலையில் 08.01.2020 மற்றும் 26.12.2020 ஆகிய நாட்களில் பணிக்குவராமல் வேலை நிறுத்தப்போராட்டத்தில் கலந்துகொண்ட காரணத்தினால் 08.01.2020 மற்றும் 26.12.2020 ஆகிய நாட்களுக்கு அனுமதியின்றி விடுப்பாக (Absent) கழித்த பின்பும் சட்டத்திற்கு முரணாக அந்த வாரங்களுக்கான தொழிலாளர்களின் வார விடுப்பினை ஊதியத்துடன் கூடிய வருடாந்திர விடுப்பாக கழித்திருப்பது ஆய்வின்போது கண்டறியப்பட்டதாகவும், மேலும் மேற்படி தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கான வருகை பதிவேடு படிவம் 25–இன்படி பராமரித்து வைத்திருக்கப்படவில்லை மற்றும் ஆய்வின்போது கேட்டும் கிடைக்கும்படி செய்யப்படவில்லை என்றும், மேலும் மேற்படி தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களின் ஊதியத்துடன் கூடிய வருடாந்திர விடுப்பு குறித்த படிவம் 15–இன்படியான பதிவேடு தொழிற்சாலையில் பராமரித்து வைத்திருக்கப்படவில்லை மற்றும் ஆய்வின்போது கேட்டும் கிடைக்கும்படி செய்யப்படவில்லை என்றும், அதன் மூலம், எதிரி தொழிற்சாலைகள் சட்டம் 1948 (உடன் திருத்தப்பட்ட சட்டம் 1987) மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள் 1950, **(1)** பிரிவு 79(6), **2)** பிரிவு 112 விதி 103, **(3)** பிரிவு 83 உடன் பிரிவு 112 மற்றும் விதி 87–இன் படியான முரண்பாடுகள் புரிந்து பிரிவு 92 (3 எண்ணிக்கை) தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக குற்ற முறையீடு தாக்கல் செய்துள்ளார்.

**2)** எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையான பிறகு வழக்கு ஆவணங்களின் நகல்கள் வழங்கப்பட்டது. எதிரியின் மீது தொழிற்சாலைகள் சட்டம் 1948 (உடன் திருத்தப்பட்ட சட்டம் 1987) மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள் 1950 **(1)** பிரிவு 79(6), **2)** பிரிவு 112 விதி 103, **(3)** பிரிவு 83 உடன் பிரிவு 112 மற்றும் விதி 87 உ/இ 92 (3 எண்ணிக்கை)–

இன் படியான முரண்பாடுகள் பற்றி வினவிய போது எதிரி தாம் குற்றவாளி இல்லை என மறுத்து, வழக்கை விசாரணை செய்ய வேண்டுமென்று தெரிவித்தார். எனவே, புகார்தாரர் தரப்பு சாட்சி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**3)** இவ்வழக்கில் புகார்தாரர் தரப்பு சாட்சியாக திருமதி.சித்ரா என்பவர் அ.சா.1 விசாரிக்கப்பட்டு அவர் மூலம் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.12 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**4)** அ.சா.1 திருமதி.சித்ரா தனது சாட்சியத்தில் விருதுநகர் மாவட்டம் மற்றும் விருதுநகர் வட்டம் மதுரை ரோடு, சின்னமூப்பன்பட்டி சர்வே எண் 6/377 ல் அமைந்துள்ள தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (மதுரை) லிமிடெட் என்ற தொழிற்சாலையானது தொழிற்சாலையின் கீழ் பதிவு பெற்ற தொழிற்சாலை என்றும், அதன் பதிவு எண் VNR 01045 என்றும், எதிரி மேற்படி தொழிற்சாலையின் மேலாளர் என்றும், மேற்படி தொழிற்சாலையின் பணியாளர் மற்றும் அரசு போக்குவரத்து தொழிலாளர் சங்கம், விருதுநகர் பொது செயலாளரான வெள்ளைதுரை என்பவரிடமிருந்து 21.01.2021 அன்று புகார் மனு பெறப்பட்டது என்றும், அதில் 08.01.2020 மற்றும் 26.11.2020 ஆகிய தினங்களில் அகில இந்திய வேலை நிறுத்த போராட்டத்தில் கலந்து கொண்ட பராமரிப்பு தொழிலாளர்களுக்கு அந்தந்த வாரத்தின் ஓய்வு தினத்தை ஈட்டிய விடுப்பு கணக்கில் மாற்றியமைக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது என்றும், மேலும் புகார் மனுவின் அடிப்படையில் 29.04.2021 அன்று பிற்பகல் 03.50 மணியளவில் மேற்படி தொழிற்சாலையினை தான் ஆய்வு செய்தபோது தொழிற்சாலையின் மேலாளரிடம் விடுப்பு கோரி தொழிலாளர்கள் விண்ணப்பம் எதுவும் சமர்ப்பிக்காத நிலையில் 08.01.2020 மற்றும் 26.11.2020 ஆகிய

நாட்களில் பணிக்கு வராமல் வேலை நிறுத்த போராட்டத்தில் கலந்து கொண்ட காரணத்தினால் மேற்படி இரு நாட்களுக்கும் அனுமதியின்றி விடுப்பு எடுத்ததாக கழித்த பின்பும் சட்டத்திற்கு முரணாக அந்த வாரங்களுக்கான தொழிலாளர்களின் வார விடுப்பினை ஊதியத்துடன் கூடிய வருடாந்திர விடுப்பாக கழித்திருப்பது கண்டறியப்பட்டது என்றும், இது தொழிற்சாலைகள் சட்டப்பிரிவு 79(6) உடன் பிரிவு 92–இன் கீழ் முரணாகும் என்றும், மேற்படி தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கான வருகை பதிவேடு படிவம் 25 பராமரித்து வைத்திருக்கப்படவில்லை என்றும், இது தொழிற்சாலைகள் சட்டப்பிரிவு 112 விதி 103 உடன் பிரிவு 92–இன் கீழ் முரணாகும் என்றும், தொழிலாளர்களின் ஊதியத்துடன் கூடிய வருடாந்திர விடுப்பு குறித்த படிவம் 15 ன் படியான பதிவேடு பராமரிக்கப்படவில்லை என்றும், இது தொழிற்சாலைகள் சட்டப்பிரிவு 83 உடன் பிரிவு 112 மற்றும் விதி 87 உடன் பிரிவு 92–இன் கீழ் முரணாகும் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**5)** அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றும் அம்சங்கள் குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச 313(1)(பி)பிரிவின் கீழ் வினவியபோது பொய்சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளதாக எதிரி தெரிவித்து தனது தரப்பில் சாட்சிகள் உள்ளது என்று தெரிவித்தார். எதிரி தரப்பில் எ.சா.1 முதல் எ.சா.3 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு எ.சா.ஆ.1 மற்றும் எ.சா.ஆ.2 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**6)** இந்த வழக்கில் தற்போது தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில், எதிரி மீதான குற்றம் புகார்தாரர் தரப்பு சாட்சிய சான்றாவணங்களின் மூலம் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால்

நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**7) பிரச்சினை மற்றும் முடிவு**

புகார்தாரரால் எதிரி மீது தொழிற்சாலைகள் சட்டம் 1948 (உடன் திருத்தப்பட்ட சட்டம் 1987) மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள் 1950 **(1)** பிரிவு 79(6), **2)** பிரிவு 112 விதி 103, **(3)** பிரிவு 83 உடன் பிரிவு 112 மற்றும் விதி 87 ஆகியவற்றின் கீழான முரண்பாடுகள் மற்றும் தண்டனை பிரிவு 92 (3 எண்ணிக்கை) தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழான குற்றம் புரிந்ததாக புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**8)** கடந்த 29.04.2021 அன்று பிற்பகல் 03.50 மணியளவில் வாதி, விருதுநகர் மாவட்டம், விருதுநகர் வட்டம், சின்னமூப்பன்பட்டி கிராமத்தில் உள்ள தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்(மதுரை) லிட்., விருதுநகர் கிளையை ஆய்வு செய்தபோது தொழிற்சாலையின் மேலாளரிடம் விடுப்பு கோரி தொழிலாளர்கள் விண்ணப்பம் எதுவும் சமர்ப்பிக்காத நிலையில் 08.01.2020 மற்றும் 26.12.2020 ஆகிய நாட்களில் பணிக்கு வராமல் வேலை நிறுத்தப்போராட்டத்தில் கலந்துகொண்ட காரணத்தினால் 08.01.2020 மற்றும் 26.12.2020 ஆகிய நாட்களுக்கு அனுமதியின்றி விடுப்பாக (Absent) கழித்த பின்பும் சட்டத்திற்கு முரணாக அந்த வாரங்களுக்கான தொழிலாளர்களின் வார விடுப்பினை ஊதியத்துடன் கூடிய வருடாந்திர விடுப்பாக கழித்திருப்பது ஆய்வின்போது கண்டறியப்பட்டதாகவும், மேலும் மேற்படி தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கான வருகை பதிவேடு படிவம் 25–இன்படி பராமரித்து வைத்திருக்கப்படவில்லை மற்றும் ஆய்வின்போது கேட்டும் கிடைக்கும்படி செய்யப்படவில்லை என்றும், மேலும் மேற்படி தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களின் ஊதியத்துடன் கூடிய வருடாந்திர விடுப்பு குறித்த படிவம் 15–இன்படியான பதிவேடு

தொழிற்சாலையில் பராமரித்து வைத்திருக்கப்படவில்லை மற்றும் ஆய்வின்போது கேட்டும் கிடைக்கும்படி செய்யப்படவில்லை என்றும், அதன் மூலம், எதிரி தொழிற்சாலைகள் சட்டம் 1948 (உடன் திருத்தப்பட்ட சட்டம் 1987) மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள் 1950, (1) பிரிவு 79(6), 2) பிரிவு 112 விதி 103, (3) பிரிவு 83 உடன் பிரிவு 112 மற்றும் விதி 87–இன் படியான முரண்பாடுகள் புரிந்து பிரிவு 92 (3 எண்ணிக்கை) தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளார் என்பதே எதிரி மீதான வழக்காகும்.

**9)** மேற்படி எதிரி மீதான குற்றச்சாட்டினை நிரூபிக்கும்வகையில் மேற்படி சம்பவ சமயத்தில் விருதுநகர் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர்–I ஆக பணிபுரிந்த திருமதி.சித்ரா என்பவர் அ.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், இத்தொழிற்சாலையில் பணியாளர் மற்றும் அரசு போக்குவரத்து தொழிலாளர் சங்கம், விருதுநகரின் பொதுச்செயலாளரான வெள்ளத்துரை என்பவரிடமிருந்து 21.01.2021 அன்று புகார் மனு பெறப்பட்டதாகவும், அப்புகார்மனுவில் 08.01.2020 மற்றும் 26.11.2020 ஆகிய தேதிகளில் அகிய இந்திய வேலை நிறுத்த போராட்டத்தில் கலந்துகொண்ட பராமரிப்பு தொழிலாளர்களுக்கு அந்தந்த வாரத்தின் ஓய்வுதினத்தை ஈட்டிய விடுப்பு கணக்கில் காண்பிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்ததாகவும், அப்புகாரின் அடிப்படையில் 29.04.2021 அன்று பிற்பகல் 03.50 மணிக்கு மேற்படி தொழிற்சாலையை தான் ஆய்வு செய்ததாகவும், ஆய்வின்போது பின்வரும் முரண்பாடுகள் கண்டறியப்பட்டதாகவும், மேற்படி தொழிற்சாலையின் மேலாளரிடம் விடுப்பு கோரி தொழிலாளர்கள் எதுவும் விண்ணப்பம் சமர்ப்பிக்காதபோது 08.01.2020 மற்றும் 26.11.2020 ஆகிய நாட்களில் பணிக்கு வராமல் வேலை நிறுத்த

போராட்டத்தில் கலந்துகொண்ட காரணத்தினால் மேற்படி இரு நாட்களுக்கும் அனுமதியின்றி விடுப்பாக கழித்த பின்பும், சட்டத்திற்கு முரணாக அந்த வாரங்களுக்கான தொழிலாளர்களின் வார விடுப்பினை ஊதியத்துடன் கூடிய வருடாந்திர விடுப்பாக கழித்திருப்பது ஆய்வின்போது கண்டறியப்பட்டதாகவும், இது தொழிற்சாலைகள் சட்டப்பிரிவு 79(6)–இன் கீழ் முரணாகும் என்றும், மேற்படி தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கான வருகை பதிவேடு படிவம் 25 இன்படி பராமரித்து வைத்திருக்கப்படவில்லை என்றும், மேற்படி படிவம் 25 ஆய்வின்போது கேட்டும் கிடைக்கும்படி செய்யப்படவில்லை என்றும், இது மேற்படி தொழிற்சாலைகள் சட்டப்பிரிவு 112 விதி 103–இன் கீழ் முரணாகும் என்றும், தொழிலாளர்களின் ஊதியத்துடன் கூடிய வருடாந்திர விடுப்பு குறித்த படிவம் 15 ன் படியான பதிவேடு பராமரிக்கப்படவில்லை என்றும், மேற்படி படிவம் 15 ஆய்வின்போது கேட்டும் கிடைக்கும்படி செய்யப்படவில்லை என்றும், இது மேற்படி தொழிற்சாலைகள் சட்டப்பிரிவு 83 உடன் பிரிவு 112 மற்றும் விதி 87–இன் கீழ் முரணாகும் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**10)** மேலும் மேற்படி சாட்சியத்தினை நிரூபிக்கும்வகையில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம், மதுரை லிமிடெட் நிறுவனத்தின் பதிவு விண்ணப்பம் படிவம்–2 ஆனது அ.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கான மேற்படி நிறுவனத்தின் பணியாளர்களுக்கான வருகை பதிவேடு நகல் மற்றும் 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்கான மேற்படி நிறுவனத்தின் பணியாளர்களுக்கான வருகை பதிவேடு நகல் ஆகியவை அ.சா.ஆ.4 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இவ்வழக்கில் 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்கான வருகை பதிவேடுதான் தாக்கல் செய்யப்பட்டுள்ளதே தவிர

நவம்பர் மாதத்திற்காக வருகை பதிவேடு தாக்கல் செய்யப்படவில்லை. இருப்பினும் மேற்படி அ.சா.ஆ.4 –இல் உள்ள ஜனவரி 2020 மாதத்திற்கான வருகை பதிவேட்டை பார்வையிடும்போது சுமார் 20 நபர்களுக்கு அனுமதியற்ற விடுப்பாக (Absent) குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோல் மேற்படி தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநரின் ஆய்வறிக்கை அ.சா.ஆ.3–இலும் மேற்படி மூன்று குற்றச்சாட்டுக்களும் புரியப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் மேற்படி எதிரிக்கு மேற்படி குற்றச்சாட்டுக்கள் குறித்த காரணம் காட்டும் அறிவிப்பு அ.சா.ஆ.6–இலும் மேற்படி குற்றங்கள் புரியப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது. மேலும் மேற்படி எதிரி தரப்பில் இவ்வழக்கு தொடரப்படும் வரை எவ்வித பதிலும் வழங்கப்படவில்லை.

**11)** மேலும் மேற்படி எதிரி தரப்பில் புகார்தாரரிடம் 21.01.2021 ஆம் தேதி புகார் அளித்த நபரும், மேற்படி தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக விருதுநகர் கிளை தொழில்நுட்ப கைவினைஞரான வெள்ளத்துரை என்பவர் எ.சா.1 ஆகவும், மேற்படி அலுவலகத்தின் ஆட்சித்துறை உதவி மேலாளரான கண்ணன் என்பவர் எ.சா.2 ஆகவும், சட்டத்துறை உதவி மேலாளரான மாரிமுத்து எ.சா.3 ஆகவும் விசாரணை செய்யப்பட்டுள்ளனர். மேற்படி சாட்சியங்களில் எ.சா.1 தனது சாட்சியத்தில் தான் புகார் கொடுத்திருந்ததாகவும், அதனடிப்படையில் தனது பணிமனையில் ஆய்வு செய்ததாகவும், அவர்கள் ஆய்வு செய்து நிர்வாகத்திடம் விளக்கம் கேட்டதாகவும், அதன்பிறகு நிர்வாகம் குறைகளை சரிசெய்துவிட்டதாகவும், மேற்படி பிரச்சனையில் நிர்வாகம் சிஐடியூ தொழிற்சங்கத்தோடு சமரசம் பேசி ஓய்வு நாட்களை ஈட்டிய விடுப்பாக சேர்த்துக்கொண்டதாகவும், மேல்நடவடிக்கை தேவையில்லை என்றும் தொழிலக பாதுகாப்பு துணை இயக்குநருக்கு கடிதம் அனுப்பியதாகவும் கூறியுள்ளார். மேற்படி 07.11.2023 ஆம் தேதியிட்ட கடிதமானது எ.சா.ஆ.1 ஆக

குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி கடிதத்திலும் மேற்படி ஆய்வின்போது மேற்படி குறைபாடுகள் கண்டறிந்ததாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. அதேபோல் எ.சா.2 அவர்கள் சாட்சியத்தில், ஆய்வின்போது போக்குவரத்து கழக தொழிலாளர்களுக்கு விடுப்பு சம்பந்தப்பட்ட உரிமைகளையும் அதன் பலன்களையும் வழங்கும்படி கூறியதாகவும், அதனடிப்படையில் அவர்கள் நிர்வாகம் சார்பில் 28.02.2023 ஆம் தேதி புகாரில் கண்டுள்ளபடி விடுப்பை சரிசெய்துவிட்டதாகவும், அதனால் மேல்நடவடிக்கை தேவையில்லை என்று கடிதம் கொடுத்ததாக சாட்சியமளித்து மேற்படி கடிதம் எ.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி எ.சா.ஆ.2–லிலும் மேற்படி ஆய்வின் அடிப்படையில் 33 தொழில்நுட்ப பணியாளர்களுக்கும் 08.01.2020 மற்றும் 26.11.2020 ஆகிய தேதிகளில் ஆப்செண்ட் ஆன காரணத்தால் அவர்களுக்குரிய வார ஓய்வை ரத்து செய்து ஈட்டிய விடுப்பு கழிக்கப்பட்டதாகவும் ஒப்புக்கொள்ளப்பட்டு அதன்பின்பு அது ரத்து செய்யப்பட்டு வார ஓய்வு வழங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, மேற்படி எ.சா.ஆ.2–லிலும் மேற்படி ஆய்வின் போது மேற்படி முரண்பாடு இருந்ததாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, மேற்படி எதிரி தரப்பில் மேற்படி முரண்பாடுகள் சரிசெய்யப்பட்டுவிட்டதாக சாட்சியமளித்திருந்தாலும், அ.சா.ஆ.12 கடிதத்தின்படி மேற்படி துணை இயக்குநர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் அவர்களின் ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ள குற்றச்சாட்டுக்கள் சரிசெய்யப்பட்டு தற்போது நடைமுறையில் பராமரிக்கப்பட்டு வருவதாகவும், எனவே, மேற்படி குற்ற வழக்கினை முடிவிற்கு கொண்டு வர வேண்டுமென்றும் கூறப்பட்டிருந்தாலும், மேற்படி ஆய்வின்போது மேற்படி எதிரி நிறுவனத்தில் குற்றச்சாட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள முரண்பாடுகள் கண்டறியப்பட்டுள்ளது என்பது மேற்படி சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் வாயிலாக அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி எதிரி தரப்பிலும்

மேற்படி குற்றச்சாட்டுக்கள் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, அதன்பின்னிட்டு மேற்படி குறைபாடுகள் களையப்பட்டிருந்தாலும் மேற்படி குற்றச்சாட்டுக்களானது அரசு தரப்பில் திரும்ப பெறப்படாத நிலையில், ஆய்வின்போது மேற்படி முரண்பாடுகள் காணப்பட்டதால் மேற்படி எதிரி மீதான மேற்படி குற்றச்சாட்டுக்களானது சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகவே தீர்மானிக்கப்படுகின்றது. எனவே, மேற்படி பிரிவுகளின் கீழ் எதிரி தண்டிக்கத்தக்கவர் என்று இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

**12)** மேலும் மேற்படி எதிரி தரப்பில் அரசு போக்குவரத்து கழகமானது தொழிற்சாலை சட்டத்தின் கீழ் தொழிற்சாலை என்ற வரையறைக்குள் வராது என்றும், அதனால் மேற்படி சட்டம் மேற்படி நிறுவனத்திற்கு பொருந்தாது என்று வாதிடப்பட்டது. ஆனால் மேற்படி வாதமானது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. ஏனெனில், தொழிற்சாலைகள் சட்டம்

Section 2 (m) “factory” means any premises including the precincts thereof-

(i) whereon ten or more workers are working, or were working on any day of the preceding twelve months and in any part of which a maunfacturing process is being carried on with the aid of power, or is ordinarily so carried on,

என்று தொழிற்சாலையை வரையறுக்கின்றது. மேலும் மேற்படி சட்டத்தின் பிரிவு 2(k) ஆனது உற்பத்தி செயல்முறை என்பதை

Section 2 (k) “manufacturing process” means any process for -

(i) making, altering, repairing, ornamenting, finishing, packing, oiling, washing, cleaning, breaking up, demolishing, or otherwise treating or adapting any article or substance with a view to its use, sale, transport, delivery or disposal; or என்று வரையறுக்கின்றது. அதன்படி எந்தவொரு பொருளையும், அதன் பயன்பாடு, விற்பனை, போக்குவரத்து, விநியோகம் அல்லது அகற்றுதல் ஆகியவற்றை கருத்திற்கொண்டு தயாரித்தல், மாற்றுதல், பழுதுபார்த்தல், அலங்கரித்தல்,

எண்ணெய் இடுதல், கழுவுதல், சுத்தம் செய்தல், உடைத்தல், இடித்தல் அல்லது வேறுவிதமாக கையாளுதல் என்று கூறுகின்றது. இவ்வழக்கில் மேற்படி போக்குவரத்து கழகமானது மக்கள் போக்குவரத்திற்கான ஒரு சாதனமாக பயன்படுத்தப்பட்டு மேற்படி போக்குவரத்து வாகனங்களை பராமரிக்கும் பணி செய்து வருகின்றது. மேலும் மேற்படி போக்குவரத்து கழகமானது தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு அ.சா.ஆ.4–இன் படி சுமார் 53 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மேலும் மேற்படி அ.சா.ஆ.1–படிவம் 2–இல் Nature of Manufacturing process என்ற தலைப்பின் கீழ் Maintenance of passenger transport vehicle என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, மேற்படி எதிரி நிறுவனமானது போக்குவரத்து வாகனங்களை பராமரிக்கும் பணி செய்து வருவதால் மேற்படி பிரிவு 2(k)–இன்படி தொழிற்சாலை என்ற பதத்திற்குள் அடங்கிவிடுகின்றது. மேலும் மேற்படி ஆய்வறிக்கை அ.சா.ஆ.3–இல் மேற்படி நிறுவனமானது Class of factory என்ற காலத்தில் Transport corporation workshop என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, மேற்படி எதிரி நிறுவனமானது தொழிற்சாலை என்ற பதத்திற்குள் வராது என்ற வாதம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**13)** மேலும் மேற்படி எதிரி மேற்படி நிறுவனத்தின் அதிகாரம் அளிக்கப்பட்ட நபர் இல்லை என்றும், மேலாண்மை இயக்குநர்தான் அதிகாரம் வாய்ந்த நபர் என்றும், அவர்மீது தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்க வேண்டும் என்றும் வாதிடப்பட்டது. மேற்படி வாதமும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. ஏனெனில் அ.சா.1 அவரது குறுக்குவிசாரணையின்போது குற்றச்சாட்டு மேலாளர் சம்பந்தப்பட்டது என்பதால் எதிரி மீது மட்டும் வழக்கு தொடர்ந்துள்ளோம் என்று சாட்சியமளித்துள்ளார். மேலும் மேற்படி சட்டத்தின் பிரிவு 92 ஆனது The

Occupaier and manager of the factory shall each be guilty of an offence என்று கூறுகின்றது. எனவே,மேற்படி தொழிற்சாலையை நிர்வகித்து வருபவர் என்ற முறையில் மேற்படி எதிரி மீது மட்டும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் மேற்படி வழக்கானது பாதிக்கப்பட்டுள்ளதாக கருத இயலாது.

**14)** மேலும் மேற்படி குற்றச்சாட்டுக்கள் சம்பந்தமாக தொழிலாளர் நீதிமன்றத்தில்தான் முறையீடு செய்யப்பட்டிருக்க வேண்டும் என்றும், குற்ற வழக்கு தொடுக்க முடியாது என்றும் எதிரி தரப்பில் வாதிடப்பட்டது. ஆனால் மேற்படி வாதமானது ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை. ஏனெனில், மேற்படி குற்றச்சாட்டுக்களானது மேற்படி தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் வரையறை செய்யப்பட்டு அதற்கான தண்டணைகளுக்கும் வழிவகை செய்யப்பட்டுள்ள சூழ்நிலையில் மேற்படி சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற வழக்கானது நிலைக்கத்தக்கதாகவே உள்ளது.

**15)** மேலே பத்திகளில் விரிவாக ஆராயப்பட்டதன் அடிப்படையில் எதிரி மீதான தொழிற்சாலைகள் சட்டம் 1948 (உடன் திருத்தப்பட்ட சட்டம் 1987) மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள் 1950 **(1)** பிரிவு 79(6) உ/இ 92 **2)** பிரிவு 112 விதி 103, **(3)** பிரிவு 83 உடன் பிரிவு 112 மற்றும் விதி 87 உ/இ 92 (3 எண்ணிக்கை)படியான முரண்பாடு புகார்தாரர் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**16)** முடிவில் எதிரி தொழிற்சாலைகள் சட்டம் 1948 (உடன் திருத்தப்பட்ட சட்டம் 1987) மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள் 1950 **(1)** பிரிவு 79(6) உ/இ 92 **2)** பிரிவு 112 விதி 103 உ/இ 92 **(3)** பிரிவு 83 உடன் பிரிவு 112 மற்றும் விதி 87 உ/இ 92–ன் படி குற்றவாளி என்று கு.வி.மு.ச. பிரிவு 255(2)ன் படி இந்நீதிமன்றம் தீர்மானித்து, வழக்கின் சூழ்நிலை மற்றும்

தன்மையை கருத்திற்கொண்டு பிரிவு 79(6) உ/இ 92—ன் படியான குற்றத்திற்கு ரூ. 1,000/— அபராதமும், கட்ட தவறினால் இரண்டு வாரங்கள் மெய்க்காவல் சிறைத்தண்டனையும், பிரிவு 112 விதி 103 உ/இ 92—ன் படியான குற்றத்திற்கு ரூ. 1,000/— அபராதமும், கட்ட தவறினால் இரண்டு வாரங்கள் மெய்க்காவல் சிறைத்தண்டனையும், பிரிவு 83 உடன் பிரிவு 112 மற்றும் விதி 87 உ/இ 92—ன் படியான குற்றத்திற்கு ரூ. 1,000/— அபராதமும், கட்ட தவறினால் இரண்டு வாரங்கள் மெய்க்காவல் சிறைத்தண்டனையும் விதித்து தீர்ப்பளிக்கப்படுகிறது. மொத்த அபராதம் ரூ. 3,000 /— ஆகும்.

இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்ட என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு மே திங்கள் 29ஆம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

R V RAJA KUMAR
Digitally signed by R V RAJA KUMAR
Date: 2026.05.29 16:40:06 +0530

**தலைமை நீதித்துறை நடுவர்,**
**திருவில்லிபுத்தூர்.**

<u>அரசு தரப்பு சாட்சி—</u>

அ.சா.1 —திருமதி.சித்ரா (துணை இயக்குநர் —I, தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்,விருதுநகர்.

<u>அரசுதரப்பு சான்றாவணங்கள்—</u>

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 14.10.2020 | படிவம்—2 |
| அ.சா.ஆ.2 | 26.07.2021 | புகார்மனு |
| அ.சா.ஆ.3 | 29.04.2021 | பூர்த்தி செய்யப்பட்ட ஆய்வறிக்கை |
| அ.சா.ஆ.4 | —— | டிசம்பர் மற்றும் ஜனவரி மாத வருகைப்பதிவேட்டின் நகல் |
| அ.சா.ஆ.5 | 07.05.2021 | எதிரி மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படுவது தொடர்பாக பெறப்பட்ட அனுமதி கடிதம் |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.6 | 25.06.2021 | எதிரிக்கு அனுப்பப்பட்ட காரணம் கோரும் அறிவிப்பு |
| அ.சா.ஆ.7 | 30.06.2021 | பதிவு அஞ்சல் ஒப்புதல் அட்டை |
| அ.சா.ஆ.8 | 16.07.2021 | எதிரியிடமிருந்து பதில் பெறப்படாததால் அவர் மீது நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பாக தெரிவிக்கப்பட்ட கடிதம் |
| அ.சா.ஆ.9 | 16.07.2021 | எதிரி மீது வழக்கு தொடர அனுமதி கோரி மதுரை தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார கூடுதல் இயக்குநருக்கு அனுப்பப்பட்ட வழக்கு முன்மொழிவு பிரேரணை |
| அ.சா.ஆ.10 | 26.07.2021 | திருத்தச்சீட்டு |
| அ.சா.ஆ.11 | 22.07.2021 | வழக்கு அனுமதி ஆணை |
| அ.சா.ஆ.12 | 01.03.2023 | எதிரி முரண்பாடுகளை சரிசெய்துள்ளதாக தெரிவித்து இயக்குநர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், சென்னை அவர்களுக்கு சமர்ப்பித்த கடிதம் |

<u>எதிரி தரப்பு சாட்சிகள்</u>–

எ.சா.1 –திரு.வெள்ளைத்துரை

எ.சா.2 –திரு.கண்ணன்

எ.சா.3 –திரு.மாரிமுத்து

<u>எதிரி தரப்பு சான்றாவணங்கள்</u> –

| | | |
|---|---|---|
| எ.சா.ஆ.1 | 07.11.2023 | தொழிலக பாதுகாப்பு துணை இயக்குநருக்கு எ.சா.1 கொடுத்த கடிதம் |
| எ.சா.ஆ.2 | 01.03.2023 | சென்னை தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநருக்கு எ.சா.2 கொடுத்த கடிதம் |

R V RAJA KUMAR
Digitally signed by R V RAJA KUMAR
Date: 2026.05.29 16:40:13 +0530

**தலைமை நீதித்துறை நடுவர்,**
**திருவில்லிபுத்தூர்.**

தலைமை நீதித்துறை நடுவர்
நீதிமன்றம், திருவில்லிபுத்தூர்
ஆண்டுப்பட்டிகை வழக்கு
எண்.574/2022
தீர்ப்புரை
நாள் 29.05.2026